உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இலக்கம் - 14/2022

எனது இலக்கம் - HA/02/33-I
உள்நாட்டலுவல்கள் பிரிவு,
"நில மெதுர" எல்விடிகல
2022.11.15

மேலதிககச் செயலாளர் ( நிர்வாகம்) பொது நிர்வாக,
மேலதிககச் செயலாளர் ( நிர்வாகம்) உள்நாட்டலுவல்கள்,
மேலதிக செயலாளர் (நிர்வாகம்) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி,
சகல மாவட்ட செயலாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,

**SYSCGAA இணையவழி அலுவலக முகாமைத்துவ அமைப்பை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்.**

தற்சமயம் SYSCGAA இணையவழி அலுவலக முகாமைத்துவ அமைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவு மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டம் பாதுகாப்பான திட்டமாக இலங்கை கணினி அவசர பதில் மன்றத்தால் (SLCERT) சான்றளிக்கப்பட்டுள்ளது.

02. அதன்படி, விடுமுறைகள் எடுப்பது, எதிர்வரும் திட்டங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் முடிந்த திட்டங்களை அனுமதிக்காக சமர்ப்பித்தல் இந்த அமைப்பின் மூலம் மட்டுமே தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

03. இந்த அமைப்பின் மூலம் விடுமுறை நாட்கள், எதிர்வரும் திட்டங்கள் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது தேவையற்ற அச்சிடுதல் செலவுகளை குறைக்கவும் மற்றும் அரசாங்க செலவினங்களை குறைக்கவும் முடியும் என நான் உங்களுக்கு மேலும் தெரிவிக்கிறேன். விடுமுறைகள் தொடர்பான அத்தியாவசிய மாதாந்த மற்றும் வருடாந்த சுருக்க அறிக்கைகளை மட்டும் அச்சிட்டு தேவையான கோப்புகளில் பதிவு செய்தால் போதுமானது. இந்த SYSCGAA தரவுத் தள அமைப்பைத் கணக்காய்வு செய்வதற்காக, பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய அளவில் கணக்காய்வாளர்களுக்கு, தனித்தனியான பயனர் கணக்குகளைத் திறந்து அவற்றினுள் அணுகுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி தொகுதி தொடர்பில் கணக்காய்வுப் பணிகள் இணையவழி முறைகள் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

04. தரவு தளத்தினை அதிகபட்சம் பயன்படுத்தும் உத்தியோகத்தர்களை தரவுத் தளத்தின் ஊடாக அடையாளம் கண்டு எதிர்காலத்தில் மிகவும் வினைத்திறனான சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளித்து, அதற்கேற்ப மதிப்பீடுகளை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05. மேலும், இந்த தொகுதிக்கு மேலதிகமாக, உங்கள் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளுக்கு ஏற்ப புதிய தொகுதிகளை மேலும் விருத்தி செய்யப்பட்டு வருவதோடு, அதன்படி, இற்றைப்படுத்தப்பட்ட அந்த தொகுதியும் மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது.

06. அந்த அமைப்பு தொடர்பில் தங்களுக்கு பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் இருப்பின் syscgaasystem@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு மேலும் தெரிவிக்கிறேன்.

**ஒப்பம்/ எம்.எம்.பி.கே. மாயாதுன்னே**
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி இலக்கம் :+94 11 2050363
தொலைநகல் இலக்கம் :+94 11 2369832
மின்னஞ்சல் முகவரி :divadmin@moha.gov.lk